செ.வெ.எண். 139 நாள் : 06.04.2022

# பத்திரிக்கைச் செய்தி

நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டத்திற்குட்பட்ட மேலூர் 3 வருவாய் கிராமத்தில் காலிப் பணியிடமாக உள்ள "கிராம உதவியாளர்" பணியிடத்தினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணியிடம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பிரிவினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியிடத்திற்கான குறைந்தபட்ச கல்வித்தகுதி 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குறைந்த பட்ச வயது வரம்பு 01.01.2022 அன்று 21 வயது பூர்த்தியடைந்தவராகவும் அதிகபட்ச வயது வரம்பானது மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (மற்றும்) சீர்மரபினர் பிரிவினருக்கு 32 வயது ஆகும். மேற்கண்ட பணியிடங்களுக்கு குன்னூர் வட்டத்தினை சார்ந்த விண்ணபத்தாரர்கள் மட்டுமே தங்களைப் பற்றிய முழு விபரங்களுடன் எதிர்வரும் 15.04.2022 மாலை 5.00 மணிக்குள் குன்னூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கிடைக்கும்படி நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என குன்னூர் வட்டாட்சியர் திரு.க.சிவக்குமார் அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்